மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அசல் வழக்கு எண்.28/18 நாள் - 10.07.2019

பெயர் - விஷ்ணுபிரியா (வா.சா.3) தந்தையின் பெயர் -

விலாசம் - தாலுகா -

வயது - தொழில் -

ஜாதி - சமயம் -

நான் குண்டலகுத்தூர் கி,நி,அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன், எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன், குண்டலகுத்தூர் கிராமம் சர்வே எண் 247/4 என்பது 4ஏ, பி என்று உட்பிரிவு செய்யபட்டள்ளது. 4ஏ 94.75ஏர்ஸ், பட்டா எண் 993 பெருமாள் செட்டியார் மகன் நாராயணசாமி என்பவர் பெயருக்கும் 4பி 94.75 ஏர்ஸ், பட்டா எண் 994 பெருமாள் செட்டியார் மகன் பெருமாள் செட்டியார் பெயருக்கு 24.06.2015ல் உட்பிரிவு செய்யபட்டுள்ளது. சர்வே எண். 156/2 1.92ஹெறக்டேர்ஸ் பட்டா எண்.342 பெருமாள் செட்டியார் மகன் நாராயணசாமி பெயரில் இருந்து 156/2ஏ 1.22.5ஹெறக்டேர்ஸ், பட்டா எண் 917 பழனிச்சாமி மனைவி சின்னத்தாய் என்ற சுப்புலட்சுமி பெயருக்கும் 2பி 69.5 ஏர்ஸ் பட்டா எண்.342 நாராயணசாமி பெயருக்கும் 29.10.2011ல் உட்பிரிவு ஆகியுள்ளது. 2ஏ மீண்டும் உட்பிரிவு 2ஏ1, 2ஏ2, 2ஏ3 பெயருக்கு ரவிபாண்டியன் சீனிவாசன், கண்ணன் 02.05.2019ல் உட்பிரிவாகியுள்ளது. சர்வேஎணங.173/8சி 14.5 ஏர்ஸ் பட்டா எண் 342 நாராயணசாமி பெயருக்கு உ்ள்ளது. சர்வே எண்.173/5ஏ, 5பி, 173/6,173/8ஏ 7 ஏர்ஸ், 29 ஏர்ஸ், 19 ஏர்ஸ், 2ஏர்ஸ் பட்டா எண் 644 பெருமாள் செட்டியார் மகன் நாராயணசாமி மற்றும் மைனர் சீனிவாசன் பெயருக்கு பட்டாவாகியுள்ளது. மேற்படி சொத்துக்களுக்கான வரைபடம் அ பதிவேடு, 10(1) அடங்கல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யபடுகிறது.

கு.வி

பட்டா எண் 993, 994 யூடிஆர் சமயத்தில் பட்டா எண் 664 பெருமாள் செட்டியார் மற்றும் நாராயணசாமி பெயருக்கு பதிவாகி உள்ளது. அ பதிவேட்டிற்கு முந்திய ஆவணங்கள்

எஸ்எல்ஆர் நகல்கள் என்றால் சரிதான். பொதுவாக பட்டா மாறுதல் செய்யும்போது தரப்பினர் கொடுத்த மனு மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் பட்டா மாறுதல் மற்றும் உட்பிரிவு செய்வது வழக்கம் என்றால் சரிதான். யூடிஆர்க்கு முன்பாக யார் பெயருக்கு சொத்து இருந்தது என்று எனக்கு தெரியாது. ஆவணங்கள் பார்த்துதான் சொல்ல முடியும். யூடிஆர் பதிவேடு, எஸ்எல்ஆர் பதிவேடு நிரந்தர பதிவேடாக மாவட்ட ஆவண காப்பகத்தில் இருந்து வருகிறது என்றால் சரிதான். பட்டா மாறுதல் உத்தரவு தனியாக ஒரு உத்தரவு பிறப்பிக்கபடும் என்றால் சரிதான். பட்டா மாறுதல் உத்தரவு எந்த ஆவணத்தின் அடிப்படையில் உட்பிரிவு செய்யபட்டது என்று அந்த ஆவணங்களின் கோப்புகளை பார்த்தால் தெரிந்து கொள்ள முடியும். சர்வே எண்156/2, 167/2பி, 173/8சி ஆகியவை பட்டா எண்.342 நாராயணசாமி பெயருக்கு இருந்தது என்றால் சரிதான். சாகுபடி அடங்கல் யார் பதிவு செய்தார்களோ அவர்கள் பெயருக்கு அனுபவ அடங்கல் வழங்குவோம் என்றால் சரிதான். பட்டாதாரர் பெயருக்குத்தான் வரி விதிக்கபடுவது வழக்கம் என்றால் சரிதான்.